2020 திசம்பர் 31 ஆந் திகதிய நிலையான சொத்துக்கள்

விவரம்	கட்டிடம்	மோட்டார் வாகனம்	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	கணனி	தொடர்பாடல்	பொறித்தொகுதி மற்றும் எந்திரங்கள்	மென்பொருள்	பிற	காணி	மொத்தம்
	Rs	Rs	Rs	Rs	Rs	Rs	Rs	Rs	Rs	Rs
2019 ஜனவரி 01 ஆந் திகதியன்றைய செலவு	161,241,180	18,662,000	24,242,302	28,994,842	4,737,540	10,945,387	25,491,318	1,066,105	47,854,000	323,234,673
மீள் மதிப்பீடு	74,449,000	-	-	-	-	-	-	-	97,050,000	171,499,000
மாற்றல் (FROM REVALUATION ADJ)	138,151,000	-	-	-	-	-	-	-	47,854,000	186,005,000
கூட்டுதல்	911,244	-	5,950	34,600	-	-	-	-	-	951,794
அகற்றுதல்	-		227,147		-	-	-	-	-	227,147
2020 திசம்பர் 31அன்றைய செலவு	98,450,424	18,662,000	24,021,104	29,029,442	4,737,540	10,945,387	25,491,318	1,066,105	97,050,000	309,453,320
2020 ஜனவரி 01 அன்றைய திரண்ட தேய்மானம்	44,256,615	313,523	14,371,689	23,351,684	4,736,572	10,019,214	24,495,667	829,460	-	122,374,422
மாற்றல் (FROM REVALUATION ADJ)	37,819,309	-	-	-	-	-	-	-		37,819,309
மீள்மதிப்பு	-	-	-	-	-	-	-	-	-	-
கூட்டுதல்	3,471,772	3,732,400	1,503,434	1,861,751	928	245,852	374,010	68,210	-	11,258,357
அகற்றுதல்	-	-	215,950	-	-	-			-	215,950
2020 திசம்பர் 31 அன்றைய திரண்ட தேய்மானம்	9,909,077	4,045,923	15,659,173	25,213,435	4,737,500	10,265,066	24,869,676	897,670	-	95,597,520
2020 ஜனவரி 01அன்றைய W.D.V	116,984,565	18,348,477	9,870,613	5,643,158	968	926,173	995,652	236,645	97,050,000	200,860,251
2020 திசம்பர் 31அன்றைய W.D.V	88,541,347	14,616,077	8,361,931	3,816,007	40	680,321	621,642	168,435	97,050,000	213,855,801

குறிப்பு - 16 பிற பொறுப்புக்கள்	2020 ரூபா.	2019 ரூபா.
அட்டுறுச் செலவுகள் - பிற கொடுப்பனவு	63,000	143,500
அட்டுறுச் செலவுகள் -மேலதிக நேரம்	81,547	90,627
அட்டுறுச் செலவுகள் - பிரயாணம்	63,844	157,517
அட்டுறுச் செலவுகள்- எழுதுகருவி	577,997	75,095
அட்டுறுச் செலவுகள் - எரிபொருள்	44,294	111,195
அட்டுறுச் செலவுகள் - பிற வழங்கல்கள்	210,496	1,620
அட்டுறுச் செலவுகள் - வாகனங்களினைப் பராமரித்தல்	1,150	101,600
அட்டுறுச் செலவுகள் - பொறித் தொகுதி மற்றும் எந்திரத்தினைப் பராம	30,530	31,000
அட்டுறுச் செலவுகள் - போக்குவரத்து	5,475	-
அட்டுறுச் செலவுகள் - தொலைத் தொடர்பாடல்	215,803	305,626
அட்டுறுச் செலவுகள் -தபால் கட்டணங்கள்	14,902	11,093
அட்டுறுச் செலவுகள் - நீர் மற்றும் மின்சாரம்	244,688	260,943
அட்டுறுச் செலவுகள் - பிற ஒப்பந்தம்சார் சேவைகள்	1,691,994	964,537
அட்டுறுச் செலவுகள் - ETF	825	-
அட்டுறுச் செலவுகள் - சம்பளங்கள்	35,373	-
அட்டுறுச் செலவுகள் - பணிக்கொடை	103,560	656,931
அட்டுறுச் செலவுகள் - EPF	5,497	-
அட்டுறுச் செலவுகள் - கணக்காய்வுக் கட்டணங்கள்	649,140	850,080
அட்டுறுச் செலவுகள் - நிறுத்தி வைத்த வரி	33,104,517	33,823,839
அட்டுறுச் செலவுகள் நிறுத்தி வைத்த வரி செலுத்தக்கூடிய - கலாசார	1,384,373	1,395,714
அட்டுறுச் செலவினங்கள் - தொழிற்பாட்டுக் குத்தகை வாகனங்களினைக் கொள்வனவு செய்வதன் வாடகை	580,000	610,400
அட்டுறுச் செலவுகள் -பிற மீண்டுவரும்	439,928	1,067,449
அட்டுறுச் செலவுகள் - விடுமுறைக் கொடுப்பனவு	-	11,333
செலுத்தப்படக்கூடிய ஊக்குவிப்புக் கொடுப்பனவு	8,265,632	7,053,097
தடுத்து வைத்தல் செலுத்தக்கூடிய	95,210	349,435
பாதுகாப்பு வைப்பு செலுத்தக்கூடிய	25,000	25,000
சுத்திகரிப்பு வைப்பு -1 செலுத்தக்கூடிய	25,000	25,000
பதவியணியினர் செலுத்த வேண்டிய	219,748	240,328
மீளச் செலுத்தக்கூடிய வைப்புக்கள் செலுத்தத்தக்க	30,000	30,000
சம்பளங்கள் கட்டுப்பாட்டுக் கணக்கு	-	-
EPFகட்டுப்பாட்டுக் கணக்கு	-	-
நிறுத்தி வைத்த வரி செலுத்தக்கூடிய முறைமை	-	2,055
இடர்கடன் I	-	250,000
அடையாளம் காணப்படவேண்டிய வைப்புக்கள் (குறிப்பு 24)	10,397,234	10,523,125
மொத்தம்	58,606,756	59,168,139

குறிப்பு 17 நடைமுறை மற்றும் நடைமுறையற்ற பொறுப்புக்கள்	2020 ரூபா.	2019 ரூபா.
பணிக்கொடை செலுத்தக்கூடிய (குறிப்பு 17 (1))	32,310,448	27,908,612
முதலீடு - ஆரஸ்ஸாவ - றஸ்மி நிமேசா	255,000	255,000
முதலீடு - ஆரஸ்ஸாவ - றசனி திலினிகா	50,200	50,200
முதலீடு - ஆரஸ்ஸாவ 100 ஓவியப் போட்டியாளர்கள்	10,000	10,000
மொத்தம்	32,625,648	28,223,812

குறிப்பு 17 (I) பணிக்கொடை	2020 ரூபா.	2019 ரூபா.
வருட ஆரம்பத்தில் மீதி	27,908,612	21,483,527
முன்னைய வருட சீராக்கல்	-	-
வருடத்திற்கான கட்டண விதிப்பு	4,795,056	7,591,673
வருடத்தின்போது வழங்கப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவு	393,220	1,166,588
மொத்தம்	32,310,448	27,908,612

குறிப்பு 18 திரண்ட நிதியம்	2020 ரூபா.	2019 ரூபா.
ஆரம்ப மீதி	(39,282,738)	(33,214,576)
முன்னைய வருட சீராக்கல்	1,251,339	579,368
வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை	(12,041,238)	(6,647,530)
மொத்தம்	(50,072,636)	(39,282,738)

குறிப்பு 19 மீள் மதிப்பிடப்பட்ட இருப்பு	2020 ரூபா.	2019 ரூபா.
ஆரம்ப மீதி	19,479,200	5,610,656
முன்னைய வருடச் சீராக்கல்	23,313,309	13,868,544
பதிவழிக்கப்பட்ட பெறுமதி	-	-
மொத்தம்	42,792,509	19,479,200

குறிப்பு 20 இலங்கைச் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய நிதி	2020 ரூபா.	2019 ரூபா.
ஆரம்ப மீதி	2,311,497,232	2,186,314,876
கடந்த வருட சீராக்கல்	2,793,206	3,308,623
இந்த வருட சீராக்கல்		
வருடத்தின் மாற்றல்	84,063,233	121,873,733
கலாசார விவகார அமைச்சின் நிதி		
ஆரம்ப மீதி	94,000,000	94,000,000
வருடத்தின் மாற்றல்	-	-
ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு	-	-
மொத்தம்	2,492,353,672	2,405,497,232

குறிப்பு 21 முதியோர் நிதியக் கணக்கு	2020 ரூபா.	2019 ரூபா.
ஆரம்ப மீதி	1,334,700	1,499,779
கடந்த வருட சீராக்கல்	1,500	9,557
வருடத்தின் வட்டி	51,308	48,865
மூத்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு	(213,000)	(223,500)
மொத்தம்	1,174,509	1,334,700

குறிப்பு 22 அரச மானியங்கள் மற்றும் நிதி	2020 ரூபா.	2019 ரூபா.
மூலதனம் - அரச	37,105,344	36,705,344
வாகனம் - அரச	-	-
மூலதன மானியம் அமைச்சு கேட்போர் கூடம்	540,000	540,000
மூலதன மானியம் அமைச்சு செயற்திட்ட மேம்பாடு	2,725,600	2,225,600
மூலதனம் - நிதி	163,931,128	163,931,128
மொத்தம்	204,302,072	203,402,072

குறிப்பு 22 (I) மேம்படுத்துவதற்கு முன்கொண்டு செல்லப்பட்ட மூலதன மீதிகள்	2020 ரூபா.	2019 ரூபா.
ஆரம்ப மீதி	12,511,000	12,511,000
இவ்வருட ஒதுக்கீடு	-	-
மொத்தம்	12,511,000	12,511,000

குறிப்பு 23

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

2020 திசம்பர் 31 அன்றுள்ளவாறான அடையாளம் காணப்படாத வைப்புக்களின் விவரங்கள் 2004 - 2020

வருடம்	வங்கி	2020.12.31 அன்று அடையாளங் காணப்பட வேண்டிய வைப்புக்களின் மொத்த மதிப்பு	அடையாளங் காணப்படாத மொத்த வைப்புக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாயினும் 2020.01.10 அன்றைய கணக்கிடப்பட்ட மதிப்பு	அடையாளங் காணப்பட வேண்டிய மீதி	2020.12.31அன்றைய அடையாளங் காணப்படாத வைப்புக்களின் விபரங்கள்		
					வங்கிகளினால் அழிக்கப்பட்ட தரவாக இனங்காணப்பட்டது	பங்களிப்பாளரினை அறிந்துகொள்ளுவதற்கு வங்கிப் பற்றுச்சீட்டில் எந்தவொரு தகவலையும் குறிப்பிடாத வைப்பாளராக இனங்காணப்பட்டது	(f) மற்றும் (g) இல் குறிப்பிடப்பட்ட காரணங்களினைத் தவிர்த்து அடையாளம் காண்பதற்கு மீதமாகவுள்ள தொகை
(a)	(b)	(c)	(d)	(e) = (c) - (d)	(f)	(g)	(h)
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2004 -2009	இலங்கை வங்கி	289,641	85,209	204,432	204,432	-	-
	மக்கள் வங்கி	939,621	190,581	749,040	749,040	-	-
	தேசிய சேமிப்பு வங்கி	160,521	128,021	32,501	32,501	-	-
2010	இலங்கை வங்கி	159,351	106,254	53,097	-	-	53,097
	மக்கள் வங்கி	412,822	412,822	-	-	-	-
	தேசிய சேமிப்பு வங்கி	527,443	520,440	7,003	-	-	7,003
							-
2011	இலங்கை வங்கி	210,389	201,168	9,220	-	-	9,220
	மக்கள் வங்கி	8,544,430	8,535,026	9,404	-	-	9,404
	தேசிய சேமிப்பு வங்கி	601,099	599,848	1,251	-	-	1,251
							-
2012	இலங்கை வங்கி	4,324,890	4,323,470	1,420	-	-	1,420
	மக்கள் வங்கி	716,631	716,631	-	-	-	-
	தேசிய சேமிப்பு வங்கி	4,250,578	4,247,906	2,672	-	-	2,672
							-
2013	இலங்கை வங்கி	3,139,542	3,137,201	2,341	-	2,341	-
	மக்கள் வங்கி	4,461,355	4,459,335	2,020	-	2,020	-
	தேசிய சேமிப்பு வங்கி	1,037,101	1,025,231	11,870	-	11,870	-
							-
2014	இலங்கை வங்கி	1,672,105	1,670,453	1,652	-	1,652	-
	மக்கள் வங்கி	6,500,041	6,493,491	6,550	-	6,550	-
	தேசிய சேமிப்பு வங்கி	823,583	822,063	1,520	-	1,520	-
							-
2015	இலங்கை வங்கி	16,177,682	16,154,571	23,111	-	23,111	-
	மக்கள் வங்கி	9,927,670	9,902,724	24,946	-	24,946	-
	தேசிய சேமிப்பு வங்கி	1,218,604	1,205,044	13,560	-	13,560	-
							-
2016	இலங்கை வங்கி	22,375,693	22,336,773	38,920	-	17,583	21,337
	மக்கள் வங்கி	11,364,867	11,364,507	360	-	-	360
	தேசிய சேமிப்பு வங்கி	773,205	773,205	-	-	-	-
							-
2017	இலங்கை வங்கி	30,234,011	30,197,125	36,886	-	33,908	2,978
	மக்கள் வங்கி	15,590,484	15,577,671	12,813	-	-	12,813
	தேசிய சேமிப்பு வங்கி	467,308	467,308	-	-	-	-
							-
2018	இலங்கை வங்கி	37,225,295	35,967,286	1,258,009	-	40,287	1,217,722
	மக்கள் வங்கி	12,204,785	11,532,003	672,782	-	-	672,782
	தேசிய சேமிப்பு வங்கி	357,918	357,918	-	-	-	-
							-
2019	இலங்கை வங்கி	38,917,698	33,418,442	5,499,256	-	-	5,499,256
	மக்கள் வங்கி	9,949,601	9,116,087	833,514	-	-	833,514
	தேசிய சேமிப்பு வங்கி	151,412	151,412	-	-	-	-
							-
2020	இலங்கை வங்கி	17,208,016	16,554,285	653,731	-	-	653,731
	மக்கள் வங்கி	10,077,668	9,848,282	229,386	-	-	229,386
	தேசிய சேமிப்பு வங்கி	77,795	73,827	3,968	-	-	3,968
							-
	மொத்தம்	**273,070,855**	**262,673,621**	**10,397,234**	985,973	179,348	9,231,914

குறிப்புகள்:-

நிரல் (f) - வங்கி வைப்புக்கள் தொடர்பிலான விபரங்கள் அழிக்கப்பட்டமையினால் 2004 தொடக்கம் 2009 வரை அடையாளங் காணப்படாத மதிப்பு ரூபா. 985,973.00 ஆகும்..
ஓய்வூதியம், பணத்தைத் திருப்பிச் செலுத்துதல், அனுப்புதல் ஆகியவற்றிற்கு பங்களிப்பாளர் வரும்போது இந்த தொகையை அடையாளம் காணலாம்

நிரல் (g) - அடையாளங் காணப்படாத பெறுமதி ரூபா. 179,348.00 என்பதுடன், வைப்பாளர்களினால் அதனை அடையாளங் காண்பதற்கு எந்தவொரு விபரமும் முன்வைக்கப்படவில்லை.
ஆட்சேர்ப்பு எண்
ஓய்வூதியம், பணத்தைத் திருப்பிச் செலுத்துதல், அனுப்புதல் ஆகியவற்றிற்கு பங்களிப்பாளர் வரும்போது இந்த தொகையை அடையாளம் காணலாம்
செயற்படுத்தும் கடிதங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுதல்.

நிரல் (h) - கணனித் திட்டத்திற்கு பயன்பாடுகளினை உள்ளடக்குவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய காலமொன்று தேவையாகும்.
ஆதலால் கணனித் திட்டதிற்கு தரவுகளினை உள்ளடக்கும் வரையில் அடையாளங் காணப்படாத ரூபா. 8,260,762.00 பெறுமதி காணப்படுகின்றது
2021.12.31 நிறைவடைவதற்கு முன்னர் சகல விண்ணப்பங்களினையும் உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நிரல் (i) - இத் தொகையினை அடையாளம் காண்பதற்கு தற்போது சகல வங்கிக் கிளைகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை
2020.12.31 அன்றுள்ளவாறான முதலீட்டு அட்டவணை

முதலீடு/வங்கி	சான்றிதழ் இலக்கம்	முதலீடு			காலப்பகுதி	வருட முதலீட்டு வீதம்	கிடைக்க வேண்டிய மொத்த வட்டி	முதிர்வின் மதிப்பு	கிடைக்கக்கூடிய வட்டி			செலுத்த வேண்டிய WHT		
		திகதி		முதலீட்டு நிதி					2018	2019	2020	2018	2019	2020
		முதலீடு	முதிர்வு											
Boc	995718 Dep.Culter Affears	0 6-Jan-2017	0 6-Jan-2022	40,000,000	60 M	14.50%	29,000,000	69,000,000	5,800,000	5,800,000	5,800,000	464,000	464,000	-
NSB	2/0111/02/88012	31-Jul-2017	31-Jul-2022	388,624,537	60 M	13.00%	252,605,949	641,230,486	50,521,190	50,521,190	50,521,190	4,041,695	4,041,695	-
SMIB	SMIB/FD/000787	23-Aug-2017	23-Aug-2022	216,269,869	60 M	15.00%	162,202,402	378,472,271	32,440,480	32,440,480	32,440,480	2,595,238	2,595,238	-
SIMB	SMIB/IFD/000811 Elders Pen	0 9-Oct-2017	0 9-Oct-2022	460,000,000	60 M	14.50%	333,500,000	793,500,000	66,700,000	66,700,000	66,700,000	5,336,000	5,336,000	-
HDF(	999202000013/1	8-Dec-2017	0 8-Dec-2022	113,000,000	60 M	15.50%	87,575,000	200,575,000	17,515,000	17,515,000	17,515,000	1,401,200	1,401,200	-
PB	174600100021179-7	18-Oct-2018	18-Oct-2023	271,481,506	60 M	14.00%	190,037,054	461,518,561	7,809,742	38,007,411	38,007,411	390,487	1,900,371	-
HDF(	999206000014/31	9-Jan-2020	0 9-Jan-2021	21,553,121	12 M	11.00%	2,370,843	23,923,964			2,318,880			115,944
HDF(	999201000115/8	15-Jul-2020	14-Jul-2021	20,151,000	12 M	8.50%	1,712,835	21,863,835			797,759			-
HDF(	999201000115/9	13-Aug-2020	13-Aug-2021	10,681,000	12 M	7.50%	801,075	11,482,075			309,456			-
HDF(	999201000115/11	4-Sep-2020	4-Mar-2021	176,061,000	6 M	6.25%	5,456,685	181,517,685			3,587,544			-
HDF(	999201000115/12	22-Oct-2020	22-Jan-2021	11,200,000	3 M	5.50%	155,266	11,355,266			119,825			-
HDF(	JALA-999201000115/13	22-Oct-2020	22-Oct-2021	3,000,000	12 M	6.50%	195,000	3,195,000			37,932			-
PB	174600100025589-2	9-Nov-2020	9-Feb-2021	52,488,000	3 M	5.25%	694,567	53,182,567			400,131			-
HDF(	System-999201000115/16	13-Nov-2020	13-Feb-2021	12,910,089	3 M	5.25%	170,838	13,080,926			90,990			-
PB	Culture	16-Dec-2020	16-Mar-2021	62,832,557	3 M	4.75%	735,916	63,568,473			130,829			-
மொத்தம்				1,860,252,679			1,067,213,430	2,927,466,110	180,786,412	210,984,081	218,777,427	14,228,621	15,738,504	115,944

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை

2020 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று - ஓய்வூதிய நிதியம்

விவரம்	2020 ரூபா.	2019 ரூபா.
அங்கத்துவப் பங்களிப்பு		
தபால் சேகரிப்பு	144,789,355	143,491,961
வங்கி மற்றும் ஏனைய சேகரிப்பு	76,086,465	92,169,394
மொத்தப் பங்களிப்பு (அ)	**220,875,820**	**235,661,355**
கூட்டுதல் - வட்டி வருமானம்		
நிலையான வைப்புக்கள்	238,562,470	259,919,300
சேமிப்பு வைப்புக்கள்	1,232,094	2,236,219
பிற (இடர் கடன் II)	4,240	10,033
பிற (இடர் கடன் III)	724,042	950,911
கலாசார நிதிய வட்டி	7,321,309	6,215,142
Intrest Income Jalaya	37,932	
மொத்த வட்டி (ஆ)	**247,882,087**	**269,331,605**
கழித்தல் - செலவினம்		
ஓய்வூதியக் கொடுப்பனவு	331,553,955	312,727,588
நிதியக் கொடுப்பனவு	27,946,174	25,304,571
பணிக்கொடைக் கொடுப்பனவு	2,135,828	2,103,055
அங்கவீனர் கொடுப்பனவு	589,719	657,064
பங்களிப்பாளர்களுக்கான பயன் கொடுப்பனவுகள்	2,928,000	2,775,394
தபால் கொமிசன்	(24,360)	825
ஊக்குவிப்புக் கொடுப்பனவு	11,188,589	15,649,535
சமூகப் பாதுகாப்பு அபிவிருத்திச் செலவு	-	-
பதவியணியினரின் காப்பீடு	752,000	755,000
வாகன வாடகை	-	-
வங்கிக் கட்டணங்கள்	22,720	59,289
தபால் கொமிசன்	7,301,104	-
பிற	185,000	
நிறுத்தி வைக்கும் வரி - நிதியம்	115,944	17,008,980
நிறுத்தி வைக்கும் வரி - சேமிப்பு	-	114,532
நிறுத்தி வைக்கும் வரி - கலாசாரம்	-	475,342
212 கணக்குகளுக்கிடையே மாற்றல்	-	5,488,052
மொத்தச் செலவு (இ)	**384,694,673**	**383,119,227**
தேறிய மீதி (அ) +ஆ) - (இ)	**84,063,233**	**121,873,733**

குறிப்புக்கள்:

2020.01.01 - 2020.12.31 வரையிலான மொத்தப் பணச் சேகரிப்பு ரூபா. 231,273,054.12 ஆகும்.

இந் நிதியில் அடையாளம் காணப்படாத வைப்புக்களின் முழு மொத்தம் ரூபா. Rs 10,397,234.00 ஆகும்.

நடைமுறைப் பொறுப்புக்களாக இது ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது.(23 குறிப்பு)

தேசிய கணக்காய்வு அலுவலகம்

தவிசாளர்,
இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை.

<u>இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2019 திசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள், பிற சட்டம் மற்றும் ஒழுங்குத் தேவைகள் தொடர்பில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை.</u>

1. நிதிசார் கூற்றுக்கள்

1.1. தகுதிவாய்ந்த கருத்துரை

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் 2019 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதிய நிதி நிலவரக் கூற்று, நிதிசார் செயற்திறன் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடனான 2019 திசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவுற்ற வருடத்திற்கான நிதிசாரகூற்று, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154 (1) உறுப்புரையுடன், திருத்தி வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது அவதானிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கைக் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்படும்.

சபையின் 2019 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதிய நிதி நிலவரம் மற்றும் அன்றைய தினம் முடிவுற்ற வருடம் தொடர்பில் அதன் நிதிசார் செயற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல், இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உண்மையாகவும் மற்றும் நியாயபூர்வமாகவுள்ளது என்பதே எனது கருத்தாகும்.

1.2. தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பிலான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்மூலம் கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிதிசார் கூற்றுத் தொடர்பில் எனது பொறுப்பு, கணக்காய்வின் பொறுப்பு போன்ற பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என் மூலம் புலனாய்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பில் அடித்தளமொன்றினை வழங்குவதற்கு என்மூலம் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானவை எனவும் உசிதமானவை எனவும் நான் நம்புகின்றேன்.

1.3. நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் மற்றும் நிர்வகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிசார் கூற்று, இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல், நியாயபூர்வமானதாக முன்வைத்தல் மற்றும் ஊழல் அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான உள்ளக நிர்வாகத் தீர்மானம் எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிசார் கூற்றுக்களினைத் தயாரிக்கும்போது, சபையினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் இயலுமையினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்று என்பதுடன், முகாமைத்துவச் சபையினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு எண்ணியிருப்பின் அல்லது வேறு தீர்வொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பின், அவற்றினைத் தவிர்த்து, தொடர்ந்து முன்னெடுக்கும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் சபையினைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு உரிய விடங்களினை வெளிக்கொணர்தல் முகாமைத்துத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதியினை அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பிலான பொறுப்பு, முகாமை செய்யும் தரப்பினரினால் வகிக்கப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(I) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலத்திற்கேற்ற நிதிக் கூற்றுக்களினை தயாரிப்பதற்கு இயலுமானவாறு சுய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சரியானவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளினை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

1.4. <u>நிதிசார் கூற்றுக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு</u>

ஒட்டுமொத்தமாக நிதிசார் கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் போதுமான தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நியாயத்தினை மேலும் வழங்குதல் மற்றும் எனது கருத்துரையினை உள்ளடக்கி கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கையினை வழங்குதல் எனது நோக்காகும். நியாயத்தினை உறுதிப்படுத்துதல் உயர் மட்ட உறுதிப்பாடு எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை முன்னெடுக்கும்போது, அதில் எந்நேரமும் கணிசமான தவறான கூற்றுக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஊழல் மற்றும் தவறு தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை விளைவிக்கும் என்பதால் தவறான

கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், இந்நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, பயன்பாட்டாளர்களினால் பொருளாதாரத் தீர்மானங்களினை எடுக்கும்போது அது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

என்மூலம் தொழில் முறை தீர்ப்பு மற்றும் தொழில் முறை சந்தேகத்துடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும்,

- ஊழல் அல்லது தவறின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான தவறான கூற்றில் கவனத்தினைச் செலுத்தும்வேளையில் மற்றும் மதிப்பீடு செய்தவேளையில் தருணத்திற்கேற்ப உயர் கணக்காய்வு முறைமையினை திட்டமிட்டு ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் ஆபத்தினை கைவிடுவதற்கு, போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சாட்சிகளினைப் பெற்றுக் கொள்ளுதல் எனது கருத்துரையாகும். போதிய தவறான கூற்றினால் இடம்பெறும் விளைவுகளுக்கு மேலாக ஊழல்களினால் இடம்பெறும் தாக்கம் அதிகமானது என்பதுடன், பிளவு, தவறு ஏட்டினைத் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைக் கைவிடுதல் தவறொன்று ஏற்படுவதற்கு காரணமாகும்.

- தருணத்திற்கு ஏற்ப உகந்த கணக்காய்வு முறைமையினைத் திட்டமிடுவதற்கு சபையின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெறப்பட்டபோதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைத்திறன் தொடர்பில் கருத்துரையினை வெளிப்படுத்துவதற்கு எண்ணியிருக்கவில்லை.

- பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட வெளிப்பாடுகளின் பொருத்தப்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் கீழ் சபையினைத் தொடர்ந்து முன்னெடுத்தல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மையொன்று உள்ளதா என்பது தொடர்பில் கிடைக்கப் பெற்ற கணக்காய்வுச் சாட்சிகளினை அடிப்படையாகக் கொண்டு, கணக்கீடு தொடர்பிலான நிறுவனத்தினைத் தொடர்ந்து முன்னெடுத்தல் தொடர்பிலான அடித்தளத்தினைப் பயன்படுத்தும் தொடர்பு தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மையொன்று உள்ளது என நான் முடிவுக்கு வருவேனாயின் நிதிசார் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்பாடுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்பாடு போதாதாயின் எனது கருத்துரை ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் கீழ் தொடர்ந்து முன்னெடுப்பத்தை நிறைவுக்குக் கொண்டுவர முடியும்.

- வெளிப்பாடுகளாக உள்ளடக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களினினை முன்வைத்தல், கட்டமைப்பு, உள்ளடக்கப்படுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்களினை, சிறந்தவாறும் மற்றும் நியாயபூர்வமானவாறும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வினை அலசி ஆராய்தல், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமை செய்யும் தரப்பினர் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

2. பிற சட்டம் மற்றும் ஒழுங்குத் தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கம் என் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், எனது பரீட்சிப்பில் எடுத்துக் காட்டப்பட்ட முறைமைக்கு சரியான நிதி அறிக்கைகளினை சபை முன்னெடுத்திருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6(I) (இ) (iii) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் சபையின் மூலம் முன்வைக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்துப்போகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6(I) (இ) (iv) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்மூலம் இடம்பெற்ற பரிந்துரைகள், முன்வைக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சாட்சிகளின் கீழும் மற்றும் போதிய விடயங்களினை வரையறுத்தும் பின்வரும் கூற்றுக்களினைச் செய்வதற்கு ஏற்றவாறு போதிய விடயங்கள் ஒன்றுமில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(இ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் சபையின் நிர்வாக சபையின் யாரேனும் அங்கத்தவருக்கு சபை தொடர்பில் ஏதேனும் உடன்படிக்கையொன்று தொடர்பில் நேரடியாக அல்லது வெளியான சாதாரண வர்த்தக நிலையினையும் தாண்டி தொடர்பு உள்ளது தொடர்பானது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களினைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்து மூல சட்டத்திற்கு அல்லது சபையின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காது செயற்பட்டுள்ளது தொடர்பானது.
-

சட்டதிட்டங்கள். ஏற்பாடுகளுக்கு இணங்குதல்	விபரம்
(அ) 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் 15 (2) உட்பிரிவு	தமக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழின் கீழான பயன்கள் இல்லாதுபோகும்போது அது தொடர்பில் சபையினூடாக பங்களிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆகஸ்டு 01 ஆந் திகதி வரை செயலற்றுள்ள பங்களிப்பாளர்கள் அடையாளங் காணப்படாதிருந்ததுடன், இதனால் பயன்கள் இல்லாது போயுள்ள அங்கத்தவர்களுக்கு அது தொடர்பில் விழிப்புணர்வூட்ட முடியாதிருந்தது.
(ஆ) 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் 6 அ (1) உட்பிரிவு	சமூகப் பாதுகாப்பு, சமூக நலன்புரி, காப்புறுதி, இயல்பான மதிப்பீடு, நிர்வாகம், அனுபவத்தினைக் கொண்ட அல்லது இயலுமைகளினைக் காட்டியுள்ள நபர்களுக்கிடையே ஒன்பது பேரினைத் தாண்டாதவாறு எண்ணிக்கையினைக் கொண்ட தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவொன்று அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.2018 மே மாதத்தின் பின் அவ்வாறான குழுவொன்று செயற்படாதிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் நிறுவனத்தின் அதிகாரங்கள், பணி மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பானது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் நிறுவனத்தின் வளங்களினை சிக்கனமாகவும்,. வினைத்திறனாகவும், விளைத்திறனாகவும் காலவரைகளினுள் உரிய

சட்டதிட்டங்களுக்கு இணங்க கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தொடர்பானது.

3. ஏனைய கணக்காய்வு புலனாய்வுகள்

(அ) மீளாய்வு ஆண்டில் திசம்பர் 31 ஆந் திகதியன்று 25 மாவட்டங்களினுள் நேரடி ஆட்சேர்ப்பின் கீழ் "சுரக்கும" மற்றும் "ஆரஸ்ஸாவ" 02 சமூகப் பாதுகாப்புப் பிரேரணைத் திட்டங்கள் தொடர்பில் 50,000 பங்களிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் 37,279 பங்களிப்பாளர்கள் மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர் எவ்வாறாயினும் கடந்த வருடத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 83,346 ஆகும் என்பதுடன், அதனை மீளாய்வு ஆண்டுடன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 53 குறைவொன்றாகும். மீளாய்வு ஆண்டில் கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 100 விடக் குறைவானது என்பதுடன், கம்பகா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, புத்தளம மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் பங்களிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்யும் நபர்களின் எண்ணிக்கை 500 விடக் குறைவாக இருந்தது.

(ஆ) சபையினால் கடந்த வருடங்களில் பங்களிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்யும் திட்டம் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களின் சேவை பெறப்பட்டிருந்ததுடன், மீளாய்வு ஆண்டில் அச்சேவையினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முடியாமையின் காரணமாக 72 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு விற்பனை வலையமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் மொத்தச் செலவு ரூபா. 3,645,670 ஆகவிருந்தது. இதன் விற்பனை வலையமைப்பு அங்கத்தவர்களினூடாக மே மாதத்திலிருந்து பங்களிப்பாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் 2019 ஒக்டோபர் மாதத்திலிருந்து அவ்வுத்தியோகத்தர்கள் உரிய கருத்திட்டத்திலிருந்து விலகியமையினால் 2019 திசம்பர் 31 ஆந் திகதி வரை அங்கத்தவர்களினை ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமையொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினூடாக அமுலாக்கப்படும் சுரக்கும மற்றும் ஆரஸ்ஸாவ பிரேரணைத் திட்டத்தின் கீழ் மீளாய்வு ஆண்டில் பங்களிப்பாளர்கள் 37,543 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடமிருந்து ஆரம்பத் தவணைக் கட்டணமாக ரூபா. 22,569,186 பெறப்பட்டிருந்தபோதும் தற்போது காணப்படும் திட்டத்தின் பலவீனத்தின் காரணமாக வருடத்தினுள் அப்பங்களிப்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு தவணைகளின் எண்ணிக்கை மற்றும் நிதியினை வெவ்வேறாக அடையாளங் காண்பதற்கு இயலாமலிருந்தது. மேலும் 7,582 பங்களிப்பாளர்கள் தொடர்பில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. சபையின் தவிசாளரினால் வழங்கப்பட்ட தகவல்களின்

பிரகாரம், 37,543 பங்களிப்பாளர்கள் ஆரம்பத் தவணைக் கட்டணமாக ரூபா. 22,569,186 கொடுப்பனவு செய்துள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும் கணக்குகளின் பிரகாரம் இம் மீதியின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2019 திசம்பர் 31 ஆந் திகதி வரை சபையினூடாக சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்தப் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 750,021 ஆகவிருந்ததுடன், இப்பங்களிப்பாளர்களினுள் 2014 திசம்பர் 31 ஆந் திகதியன்று செயலற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 288,234 என இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பங்களிப்பாளரின் 60 வயது பூர்த்தியடைந்ததுடன் ஓய்வூதியக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் செயலற்ற பங்களிப்பாளர்களாக அடையாளங் காணப்பட்ட 898 பங்களிப்பாளர்களுக்கு மீளாய்வு ஆண்டின்போது ரூபா. 25,304,571 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) சபையினால் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய முகாமைத்துவத் தகவல்கள் திட்டமொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் கொள்முதலாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதுடன், 2019 நவம்பர் மாதமளவில் உரிய பணியினைப் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கைக் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், 5 கட்டங்களில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ஒரு கட்டம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் இப்பணிக்கு 4 வருடங்களாக தேங்கியிருந்த ரூபா. 12,511,000 திறைசேரி ஒதுக்கீடுகள், மீளாய்வு ஆண்டில் பயன்படுத்தப்படாது மீதமாகியிருந்தது.

(ஊ) சபையினால் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அமுலாக்கப்படும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் பிரேரணைத் திட்டம் தொடர்பில் கலாசார அமைச்சினால் 2019 திசம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா. 94,000,000 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம் தொடர்பில் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஜனவரி மாதம் வரை பங்களிப்பாளர்கள் 165 பேர் பங்களிப்பினைப் பெற்றிருந்தபோதும் 2020 ஆகஸ்டு மாதமளவில் அதன் செயலிலுள்ள பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 71 பேர் மாத்திரமாகக் காணப்பட்டது.

(எ) 2015 ஆம் ஆண்டில் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் 5 வது மாடியில் புதிய கேட்போர் கூடமொன்றினை நிர்மாணிப்பதற்கு தொழில்நுட்ப அறிக்கையொன்றினைப் பெற்று மேல் நடவடிக்கைகளினை முன்னெடுக்குமாறு முகாமைத்துவச் சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. 2019 நவம்பர் மாதத்தில் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருந்த கட்டிடத்தின் கட்டமைக்கப்பட்ட நிலையியல் தன்மை பரிட்சிப்பு அறிக்கையின் பிரகாரம், 5 வது மாடியினை நிர்மாணிப்பதற்கு கட்டிடம் பலத்தினைக் கொண்டிருக்கவில்லை என

அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2019 யூலை மாதத்தில் வழங்கப்பட்டிருந்த உடன்படிக்கை 2020 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டு வங்கிப் பிணை மீளவும் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் சபையினால் மீளாய்வு ஆண்டில் ரூபா. 731,244 செலவு செய்யப்பட்டிருந்ததுடன், இது அசையாத செலவொன்றாகவிருந்தது. மேலும், சமூகப் பாதுகாப்பு அமைச்சினால் இது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள ரூபா. 540,000 பயிற்சி கற்கை ஆய்வு செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், அதுவும் அசையாத செலவொன்றாகவிருந்தது.

(ஏ) சபையினால் தென் கொரியாவில் கடமையாற்றிய இலங்கை ஊழியர்களுக்கு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டத்தினை அமுலாக்குவதற்கு தென் கொரியாவில் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களினை செயற்படுத்தும் அரச நிறுவனமான தேசிய ஓய்வூதிய நிறுவனத்துடன் மீளாய்வு ஆண்டில் யூன் 18 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. அதேபோல இவ்வாறு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளினை அமுலாக்கும்வேளையில் வெளிநாட்டு வள அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டு அது தொடர்பிலான ஆலோசனைகளினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என 2019 திசம்பர் 19 ஆந் திகதிய PS/SP/SB/Circular/06/2019 என்ற இலக்க ஜனாதிபதிச் செயலகத்தின் சுற்றுநிருபத்தினூடாக அறிவிக்கப்பட்டபோதும், இவ்வுடன்படிக்கை தொடர்பில் விபரங்களினை முன்வைத்து உரிய ஆலோசனைகள் பெறப்பட்டிருக்கவில்லை. அதேபோல நீதியரசரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது புரிந்துணர்வு உடன்படிக்கைகளினைக் கைச்சாத்திடுதல் தடுக்கப்படுதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டபோதிலும், இது தொடர்பில் அமைசரவை அங்கீகார் இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை. இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் 06 பணிகள் உள்ளடக்கப்பட்டபோதும் மேற்காட்டப்பட்டவாறு தென் கொரியாவில் கடமையாற்றிய இலங்கை ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தினை வழங்கும் ஆரம்பப் பணி அதனினுள் உள்டக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல 2020 ஆகஸ்டு மாதமளவில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் முடிவடைந்தபோதும் அதன் எந்தவொரு பணிகளினையும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சபையினால் தேவையான நிதியினை ஒதுக்குதல் மற்றும் கொள்முதல் நடைமுறையினைப் பின்பற்றாது, அரச மதிப்பீடான ரூபா.165,000,000 ஐத் தாண்டி சபையின் பிரதான அலுவலகத்தினை முன்னெடுப்பதற்கு ஓய்வூதிய நிதியத்திலிருந்து ரூபா. 195,000,000 கொடுப்பனவினைச் செய்து கட்டிடமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பில் பொது முயற்சியாண்மைக் குழுவின் ஆலோசனைகளுக்கமைவாக தற்போதைய பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியப் பிரேரணைத் திட்டம் தொடர்பில் விளம்பரச் செயற்பாடுகளுக்கு 2 குறும்படங்கள் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு ரூபா. 824,000 செலவு செய்யப்பட்டு 6,500 இறுவட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வு ஆண்டின் இறுதியில் அவ் இறுவட்டுக்களில் 4762 ஐ வழங்குவதற்கு முடியாமல் களஞ்சியசாலையில் 06 வருடங்களாக தேங்கியிருந்தது. இதனால் அவ்வாறு பகிரந்தளிக்கப்படாதுள்ள இறுவட்டுக்களுக்கு செலவு செய்த ரூபா. 603,675 செலவு அசையாத செலவாகவிருந்தது.

(ஓ) மீளாய்வு ஆண்டில் திசம்பர் 31 ஆந் திகதியன்று சபையினை விட்டு விலகிய 48 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யப்படவேண்டிய ரூபா. 1,335,805 கிடைக்கப்படவேண்டியது என்பதுடன் அப்பெறுமதி உள்ளடக்கப்பட்டு 6 வருடங்களுக்கும் மேலாக ரூபா. 265,142 கிடைக்க வேண்டிய மீதிகளாகக் காணப்பட்டது.

(ஔ) மீளாய்வு ஆண்டில் திசம்பம் 31 ஆந் திகதியளவில் 18 ஒருங்கிணைப்பு உதியோகத்தர் பதவிகளினை உள்ளடக்கி 25 வெற்றிடங்கள் காணப்படுதல், சமூகப் பாதுகாப்புச் சபையின் பங்களிப்பாளர்களினை ஆட்சேரப்புச் செய்தல் உள்ளடங்கலான செயற்பாடுகளில் மோசமான வகையில் தாக்கம் செலுத்தியுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன,
கணக்காய்வாளர்.